NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 29 January 2019

# கட்டிமுடிக்கப்பட்ட ‘கொண்டோ’ வீட்டு விலைகள் டிசம்பரில் 0.1% ஏற்றம்

கட்டி முடிக்கப்பட்ட தனியார் அடுக்குமாடி மற்றும் கொண்டோமினியம் வீடுகளில் விலைகள் கடந்த டிசம்பர் மாதத்தில் முன்னைய மாதத்தைக் காட்டிலும் 0.1% ஏற்றம் கண்டது.

மாதத்துக்கு மாதம் என்ற அடிப்படையில் பார்த்தால் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து டிசம்பரில்தான் விலைகளில் ஏற்றம் தென்பட்டது. நவம்பர் மாதத்தில் வீட்டு விலைகள் 0.5% சரிந்தது என்று சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் நேற்று வெளியிட்ட சிங்கப்பூர் குடியிருப்பு விலைக் குறியீடு தெரிவித்தது.

ஆண்டுக்கு ஆண்டு என்ற அடிப்படையில் பார்த்தால், கடந்த டிசம்பரில் வீட்டு விலைகள் 2017ஆம் ஆண்டு டிசம்பரைக் காட்டிலும் 3.2% உயர்வாக இருந்தது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.